SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – ஜூலை 2022

**(Level II Examination - July 2022)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (203) வியாபாரச் சட்டம் (BLA)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 540, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் II பரீட்சை – ஜூலை 2022

## (203) வியாபாரச் சட்டம்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

1.1 (3)

1.2 (2)

1.3 (4)

1.4 (4)

1.5 (3)

1.6 (3)

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)*
*(12 புள்ளிகள்)*

aat SRI LANKA

1.7 தவறு

1.8 சரி

1.9 தவறு

*(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்,)*
*(03 புள்ளிகள்)*

1.10

1. வெளிப்படுத்துகை மூலம்
2. உட்கிடையான உடன்படிக்கை மூலம்
3. சீர்திருத்தல் மூலம்
4. அவசியத்தேவை நிமித்தம்
5. முரண்தடக்கல்

**1.11**

1. உடன்படிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள தரத்திற்கு பொருட்களை ஏற்றுகை செய்தல்.
2. உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட இடத்திற்கு பொருட்களை கையளிப்பு செய்வது தொடர்பில் போக்குவரத்து ஒப்பந்தம் ஒன்றை புரிதல்.
3. கொள்வனவாளருக்கு பயனுள்ள விதத்தில் காப்பீடு ஒப்பந்தத்தினை தயாரித்தல்.
4. பொருட்களுக்கான விலைப்பட்டியலை தயாரித்தல்.
5. கப்பலேற்றுகையிலிருந்து நியாயமான காலப்பகுதிக்குள் கொள்வனவாளருக்கு ஆவணங்களை அனுப்புதல்.

**1.12**

1. கட்டுப்பாட்டு பரீட்சை
2. ஒருங்கிணைப்பு பரீட்சை
3. கருவிப்பரீட்சை
4. பொருளாதார யதார்த்த பரீட்சை

**1.13**

1. வாராந்த விடுமுறை
2. பொது விடுமுறை
3. போயா விடுமுறை
4. வருடாந்த விடுமுறை
5. சாதாரண வடுமுறை
6. மகப்பேற்று விடுமுறை

**1.14**

உள்ளார்ந்த வர்த்தகம் என்பது ஒரு கம்பனியின் ( இந்த வழக்கில் நிரற்படுத்தப்பட்ட கம்பனி) பங்கு அல்லது வேறு பிணையம் தொடர்பாக சாத்தியமுள்ள நபர்களால் ஏற்படுத்தப்படும் வர்த்தக அணுகலாகும். இது கம்பனி தொடர்பாக பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படாத தகவல்களாகும். வேறுவகையில் கூறுவோமானால், உள்ளார்ந்த வர்த்தகம் என்பது பங்கு, பிணையம் அல்லது வேறு பிணையங்களை வாங்குவது அல்லது விற்பது தொடர்பாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படாத தகவல்கள் ஆகும்.

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)*
*(10 புள்ளிகள்)*

*(25 புள்ளிகள்)*

***பகுதி A முடிவு***

aat SRI LANKA

## வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

அத்தியாயம் 03 - பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் (The Law of the Sales of Goods)

**(அ)**

இது பொருட்கள் விற்பனை சட்டம் / பொருட்கள் விற்பனை கட்டளை சட்டத்தின் உட்கிடையான நிபந்தனையை அடிப்படையாக கொண்ட விடயம் ஆகும்.

பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 13 ஆனது, விற்பனையாளருக்கு விற்பனையின் போது பொருட்களை விற்பதற்கான உரிமை உண்டு. மேலும் விற்பனை உடன்படிக்கையில் பொருளின் சொத்துவம் கைமாற்றப்படுகின்ற வேளையில் அவருக்கு பொருட்களை விற்பதற்கான உரிமை உள்ளது. நியதிச்சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள இவ் உட்கிடையான நிபந்தனையை விற்பனையாளர் மீறுகின்ற தருணத்தில் அது விற்பனையாளர் விற்பனை ஒப்பந்தத்தை மீறுவதற்கு வழிவகுக்கின்றது என குறிப்பிடுகின்றது.

வழக்குச் சட்டம் ***Rowland v Divall***

தரப்பட்ட வழக்கிலே, ஜேம்ஸ் ஆனவர் பொருட்கள் விற்பனை கட்டளை சட்டத்தின் கீழ் உட்கிடையான நிபந்தனையை மீறியுள்ளார். விற்பனை செய்யப்பட்ட நேரத்தில் குறித்த லொறியின் மீது விற்பனை செய்யும் உரிமையை ஜேம்ஸ் கொண்டிருக்கவில்லை. திருத்தம் செய்வதற்காக குறித்த லொறி பீட்டரினால் அவரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. எனவே நல்லெண்ணத்துடனான கொள்வனவாளருக்கு ஏற்பட்ட இழப்பீடுகளை வெலுத்துவதற்கு ஜேம்ஸ் கடப்பாடுடையவராவார். ஆகவே லேரியானவர் ஜேம்ஸிடமிருக்கு பணத்தை கோருவதற்கு உரித்துடையவராவார். எனவே லேரியானவர் ஜேம்ஸிற்கு எதிராக வழக்கு தொடுக்க முடியும். ஜேம்ஸ் லேரிக்கு பணத்தை செலுத்த கடப்பாடுடையவராவார்.

*(06 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(ஆ). பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு (2) விளக்கம் தருக.**

**இருப்பிலுள்ள பொருட்கள்**

ஒப்பந்தம் செய்யப்படுகின்ற தருணத்தில் விற்பனையாளரின் சொத்துவத்தில் அல்லது உடைமையில் இருக்கின்ற பொருட்கள் இருப்பிலுள்ள பொருட்களாகும். அடகு வைக்கப்பட்டுள்ள அல்லது வாடகைக்கு விடப்பட்டுள்ள அல்லது முகவரொருவரின் உடைமையில் உள்ள பொருட்களும் இதிலடங்கும்.

உ-ம் : செகான் என்பவர் ஒரு ஆட்டோ மொபைல் விற்பனையாளராவார். ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹொன்டா சிவிக் வாகனத்தை பிரவாத்துக்கு விற்க ஒப்பு கொண்டார். ஒப்பந்தமானது செய்யப்பட்ட நேரத்தில் குறித்த வாகனம் செகானின் உடைமையில் இருந்தால் அந்த வாகனமானது இருப்பிலுள்ள பொருளாகும். இருப்பிலுள்ள பொருளானது குறித்த அல்லது நிர்ணயிக்கப்படாததாக இருக்க முடியும். பொருளின் தன்மையானது சொத்துவம் கைமாற்றப்படுவதில் முக்கியத்துவம் பெறுவதோடு கட்சிக்காரர்களுக்கு நிவாரணங்களை கிடைக்கச்செய்யவும் உந்துகின்றது.

**குறித்த பொருட்கள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட பொருட்கள்**

விற்பனை ஒப்பந்தம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கட்சியினரால் விடயம் தொடர்பில் அடையாளம் காணப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான பொருட்களாகும்.

உ-ம் செகான் 5 ஹொன்டா சிவிக் வாகனங்களை வைத்திருந்து அதில் நீலநிறத்தை உடைய 12345432 எனும் இலக்கத்தை கொண்ட ஒன்றினை விற்பனை செய்ய சம்மதிக்கின்ற தருணத்தில் குறித்த ஒப்பந்தத்தின் விடயப்பொருளானது ஒரு குறித்த பொருளாகும்.

**நிர்ணயிக்கப்படாத பொருட்கள்**

ஒப்பந்தமொன்று உருவாக்கப்படுகின்ற தருணத்தில் திறத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் ஆனால் முறையாக அடையாளம் காணப்படாததுமான பொருட்கள் இதுவாகும்.

உ-ம் மேலுள்ள உதாரணத்தில் பிரசாத் செகானிடமுள்ள 5 ஹொன்டா சிவிக் வாகனங்களில் இருந்து ஒன்றை வாங்குவதற்கு உடன்பட்டு ஆனால் வாகனத்தை அடையாளம் காணாதிருக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த அவ் ஒப்பந்தத்தின் விடயப்பொருட்கள் நிர்ணயிக்கப்படாத அல்லுது குறித்ததல்லாத பொருளாகும்.

**எதிர்கால பொருட்கள்**

ஒப்பந்தமொன்றின் உருவாக்கத்தின் பின்னர் விற்பனையாளரால் உற்பத்தி செய்யப்படும் அல்லது கைக்கொள்ளப்பட வேண்டிய பொருட்கள் எதிர்கால பொருட்கள் ஆகும்.

உ-ம் பிரசாத்திற்கு ஹொன்டா சிவிக் வாகனத்தினை விற்பனை செய்வது தொடர்பான ஒப்பந்தத்தினை புரிந்த பின்னர் ஜப்பானிலிருந்து குறித்த வாகனத்தை இறக்குமதி செய்கையில் அத்தகைய வாகனம் எதிர்கால பொருளாகும்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 05 - கம்பனி சட்டம்* |
|---|

**(அ)** பின்வரும் நபர்கள் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவர். ஆகவே தகுதியற்றவர்கள் என வெளிப்படையாக சட்டத்தில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அல்லாத நபர்கள் பணிப்பாளராக நியமிக்கப்பட முடியும். அத்தகைய தகுதியற்றவர்கள் பின்வருமாறு,

- 18 வயதிற்கு குறைந்த நபர்கள்
- கடனிறுக்க வகையுள்ளவர்
- சித்தசுயாதீனம் அற்றவர்
- இயற்கை நபர் அல்லாதவர்
- கம்பனியின் அமைப்பக விதியில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பாளருக்கான தகைமைகளுக்கு இணங்கி ஒழுகாதவர்
- 1982ஆம் ஆண்டு 17ம் இலக்க கம்பனி சட்டத்தின்கீழ் பணிப்பாளராக இருப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ள நபர்
- 2007ஆம் ஆண்டு 07ம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரிவு 213 , 214 இன்கீழ் பணிப்பாளராக இருப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ள நபர்
- கம்பனி சட்டத்தின் பிரிவு 213 இன்படி, பின்வரும் செயல்கள் தொடர்பில் தீர்ப்பு அல்லது தண்டணைக்கு பின்னரான 5 வருடங்களில் கம்பனியை முகாமை செய்வதிலிருந்து தடை செய்யப்படுவர்.

நபர்,

- இச்சட்டத்தின் கீழ் சிறைதண்டனையால் தண்டிக்கப்பட கூடிய குற்றமொன்றிற்கு குற்றவாளி என குற்றம் சாட்டப்பட்டவர்
- நேர்மையற்ற அல்லது மோசடியான செயல் ஒன்றுக்காக குற்றவாளி என குற்றம் சாட்டப்பட்டவர்
- கடனிறுக்க வகையற்றோர் கட்டளை சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையுள்ளோர் என குறித்த 5 வருட காலப்பகுதியில் தீர்ப்பளிக்கப்பட்டோர்
- சித்த சுயாதீனமற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்டோர்

*(04 புள்ளிகள்)*

**(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் நான்கு (4)**

- கம்பனியின் அக்கறை மற்றும் நல்லெண்ணத்துடன் செயற்படும் கடமை (பிரிவு 187)
- கம்பனி சட்டம் மற்றும் அமைப்பக விதிக்கு இணங்கி ஒழுகுவதற்கான கடமை. (பிரிவு 188)
- கவனயீனமாகவோ அசட்டையீனமாகவோ செயற்படாது அவரின் அறிவும் அனுபவமும் கொண்ட நபரில் எதிர்ப்பார்க்கக்கூடிய கவனத்துடன் செயற்பட வேண்டிய கடமை. (பிரிவு 189)
- கம்பனியின் பணிப்பாளர் அறிக்கை, கூற்று, நிதித்தரவு ஏனைய தரவுகளில் தங்கியிருக்க முடியும். (பிரிவு 190)
- அக்கறையை வெளிப்படுத்துவதற்கான கடமை .(பிரிவு 192)
- கம்பனி தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தாமை தொடர்பான கடமை. (பிரிவு 197)
- பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும் பங்கு தொடர்பாடல் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கான கடமை. (200)
- சட்டத்தின் பிரிவு 216 உடன் இணக்கமாக செல்லும் பணிப்பாளர்களுக்கு மாத்திரம் ஊதியம் மற்றும் பிற நன்மைகள்.
- சட்டத்தின் பிரிவு 216 இன்கீழ் அங்கீகரிக்கப்படாவிட்டால் பணிப்பாளர்களுக்கு எந்தவிதமான கடன்களோ, உத்தரவாதமோ அல்லது பிணையமோ வழங்கப்படுவதில்லை.
- வங்குரோத்தின்போது பணிப்பாளர் சட்டத்தின் பிரிவு 219 உடன் கட்டாயம் இணங்கியொழுக வேண்டும்.
- கடுமையான மூலதன இழப்பின்போது விசேட பொது கூட்டத்தினை கூட்டுவதற்கான கடமை.

*(04 புள்ளிகள்)*

**(இ)** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் ஆகக்குறைந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கை 01 ஆகும்.

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 10 – வணிகச் சூழலுடன் தொடர்பான குற்றங்கள் (Offences related to the business environment)**

**(அ)**

- நிறுவனங்களுக்கு இடையே விலைகளுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை ஒழுங்குப்படுத்தல், மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகளை கட்டுப்படுத்தலும் அகற்றுதலும், விலைகளைக் கட்டுப்படுத்தல், சர்வதேச மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தினை மோசமான வகையில் பாதிக்கும் நியாயமற்ற போட்டியை தடுத்தல்
- வியபார போட்டிக்கு எதிரான நடைமுறைகள் மற்றும் ஆதிக்க நிலையை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் விசாரணை செய்தல்
- பொருட்கள் மற்றும் சேவையினை விநியோகிக்கும் நபர்களுக்கு இடையே பயனுள்ள போட்டியினை கொண்டுச்செல்லலும் ஊக்கப்படுத்தலும்
- பொருட்கள் மற்றும் சேவைகளை நுகரும் நுகர்வோர், கொள்வனவாளர்கள் மற்றும் ஏனைய பாவனையாளர்களால் பெற்றுக்கொண்ட பல்வேறுப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், இருப்புத்தன்மை மற்றும் விலைகளுடன் தொடர்புடைய உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாத்தலும் மேம்படுத்தலும்
- கொள்வனவிற்காக இருப்பிலுள்ள பொருட்கள் மற்றும் சேவையின் விலை, தரநிலைகள், தரம், அளவு, ஆற்றல் மற்றும் தூய்மை தொடர்பில் நுகர்வோருக்கு தெரியப்படுத்தல்
- சட்டத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்ட விடயத்துடன் தொடர்புடைய விசாரணைகளை மேற்கொள்ளல்

*(06 புள்ளிகள்)*

**(ஆ)**

வணிகராக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் விமல் சுராஜிற்கு பொருட்களை விற்பனை செய்வதை மறுக்கமுடியாது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பின்வருவன வணிகரின் குற்றமாகக் கருதப்படுகின்றன.

1. வணிகத் தேவைக்காக பொருட்களை உடைமையில் வைத்திருக்கும் வணிகர் ஒருவர்
   - பொருட்களை விற்பனை செய்வதற்கு மறுத்தல்
   - பொருட்களின் உடைமையை மறுத்தல்
   - பொருட்களின் விலை தொடர்பிலன்றி வேறொரு நிபந்தனையில் பொருட்களை விற்பனை செய்தல்
   - அதிபடியான பொருட்களை பதுக்கி வைத்தல்

   என்பன நீதிமன்றினால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகக் கருதப்படும்.

2. சட்டத்தின் படி, சரியான ஆதாரம் இல்லாத நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கப்படாது. ஆகவே, நுகவ்வோர் பொருட்களை கொள்வனவு செய்யும்போது ரசீதினை பெற்றுக்கொள்வதற்கான உரிமையுண்டு. குறித்த ரசீது பின்வரும் தகவல்களுடன் வாடிக்கையாளருக்கு வழங்கப்படவேண்டும்.
   - விற்பனை செய்யப்பட்ட திகதி
   - பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களின் அளவு
   - செலத்தப்பட்ட பெறுமதி (விலை)
   - மொத்த விற்பனையா? சில்லறை வியாபாரமா? என்பதை குறிப்பிடவேண்டும்.

3. வணிகர் தனது வணிகஸ்தலத்தில் விற்பனைக்குள்ள பொருட்களின் விலைப்பட்டியலை காட்சிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

4. வணிகர் தனது வணிகஸ்தலத்தில் முக்கியமான இடத்தில் அதிகார சபையினால் வழங்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை வெளிப்படுத்துவதற்காக அறிவித்தல் பலகையினை வைத்திருக்கவேண்டும். குறித்த அறிவிப்புகளை அகற்றுதல் மற்றும் அவற்றில் திருத்தங்களை செய்தல் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும்.
5. வணிகர் தனது வியாபாரக் காரணிக்காக எந்தவொரு வணிகரையோ வாடிக்கையாளரையோ தவறாக வழிநடத்தவோ திசைதிருப்பவோ கூடாது.
6. உற்பத்தி செய்யப்பட்ட எந்தவொரு பொருட்களினதும் தரம் மற்றும் அதிகூடிய விலை தொடர்பில் அதிகார சபையானது எந்தவொரு வணிகருடனும் எழுத்து மூலமான உடன்படிக்கையினை மேற்கொள்ளலாம்.
7. பொருட்களின் பொதியில் (Label) அதிகூடிய சில்லறை விலை, உற்பத்தி இலக்கம், உற்பத்தி திகதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன கட்டாயம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.
8. பொருட்களின் அதிகபட்ச விலைகளை மீறி காட்சிப்படுத்தலும் விற்பனை செய்தலும்

இதன்படி, பின்வரும் சந்தர்ப்பங்களில் விமலின் செயல்களில் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளன.

- **குறிக்கப்பட்ட விலைக்கு மேல் பொருட்களை விற்பனை செய்தலும் விற்பனை செய்ய முயற்சிப்பதும்**

  2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரச் சபை சட்டத்தின் பிரிவு 11 இன் கீழ் குறிக்கப்பட்ட விலைக்கு மேல் பொருட்களை விற்பனை செய்தலும் விற்பனை செய்ய முயற்சிப்பது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். எனவே குறித்த சட்டத்தின் கீழ் பால்மா பெட்டியொன்றின் விலையை விமல் ஸ்டோர்ஸ் ரூபா 780/- இலிருந்து ரூபா 1020/- ஆக அதிகரித்தமை மற்றும் பால்மா பெட்டியில் உண்மையாக அச்சடிக்கப்பட்டிருந்த விலையை மறைத்து புதிய விலையைக் கொண்ட ஸ்டிக்கர் ஒன்றினை ஒட்டியிருந்தமை குற்றமாகும்.

- **பொருட்களை விற்பனை செய்ய மறுத்தல்**

  சுராஜ் இற்கு எவ்வித மளிகைப் பொருள்களையும் விற்பனை செய்ய்ய முடியாது என விமல் ஸ்டோர்ஸ் மறுப்புத் தெரிவித்தமையானது 2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரச் சபை சட்டத்தின் கீழ் குற்றவியல் குற்றமாகும். எனவே, வணிகத் தேவைக்காக பொருட்களை உடைமையில் வைத்திருக்கும் வணிகர் ஒருவர் பொருட்களை விற்பனை செய்வதற்கு மறுத்தல் குற்றமாகும்.

aat SRI LANKA

**எனவே, விமல் சிறைதண்டனை அல்லது தண்டத்திற்குரிய குற்றமொன்றினை செய்ததற்காக நீதவான் நீதிமன்றில் சிறைதண்டனை அல்லது தண்டத்திற்கு உட்படுத்தப்படலாம்.**

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 06 - கைமாற்றதகு ஆவணங்கள் (Negotiable Instruments)* |
|---|

**(அ)**
வங்கியின் கவுண்டரில் பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சமர்ப்பிக்கப்படும் காசோலைகள் குறுக்கு கோடிடாத சந்தர்ப்பத்தில் பணத்தினை வழங்கவேண்டியது வங்கியின் கடமையாகும். பின்வரும் சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட கருதுகோள்கள் தீர்மானிக்கப்படலாம்.

- **குறுக்கு கோடிடப்பட்ட காசோலை**
  வங்கியின் கவுண்டரில் பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சமர்ப்பிக்கப்படும் காசோலைகள் கைமாற்றதகாதது என குறிப்பிடப்பட்டிருத்தல். குறித்த காசோலை குறுக்கு கோடிடப்பட்டிருப்பின் அதனை காசாக மாற்றமுடியாது. ஆகவே பணமாக தேற்றுவதற்கு வங்கி கணக்கில் வைப்பிலிட வேண்டும்.

- **காசோலை தொகையில் முரண்பாடு காணப்படுதல்**
  எழுத்து மூலமாக ஒரு தொகையும் இலக்கத்தில் ஒரு தொகையும் குறிப்பிடப்பட்டிருத்தல். எழுத்தில் இருபத்தைந்தாயிரம் எனவும் இலக்கத்தில் ஐம்பத்திரண்டாயிரம் எனவும் குறிப்பிடப்பட்டிருத்தல்.

- **வங்கி கணக்கில் போதுமான நிலுவைத் தொகை இருப்பில் இல்லாமை**
  காசோலைக்கு செலுத்தக்கூடிய மிகுதி வங்கிக்கணக்கில் காணப்படாமை.

ஆகவே, மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் நேர்மையற்ற காசோலையாக கருதப்படும்.

*(06 புள்ளிகள்)*

**(ஆ) பொதுவான குறுக்கு கோடிடல்**

பொதுவான குறுக்குக் கோடிடல் என்பது காசோலையின் முன்பக்கத்தில் இரண்டு இணைய குறுக்கு கோடுகளைக் கொண்டிருக்கும். வணிக வங்கியொன்றின் பெயரினை தவிர்த்து ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு கூற்றினையும் இடலாம். குறுக்கு கோடிடப்பட்ட காசோலைக்கான பணத்தினை வங்கியாளர் மட்டுமே மேற்கொள்ளலாம். அத்துடன் காசோலைக்குரிய வங்கியிலிருந்து பணம் கிடைத்தபிறகு வைப்பாளனின் கணக்கிற்கு வரவினை மேற்கொள்ள பெறுனர் எந்தவொரு வங்கியிலும் காசோலையினை வைப்பிலடலாம். பொதுவான குறுக்க கோடிடல் பின்வருமாறு அமையலாம்.




SRI LANKA

**விசேட குறுக்க கோடு**

காசோலை ஒன்றில் வங்கியாளரின் பெயர் மேலதிகமாக குறிப்பிடப்பட்டிருப்பின் அல்லது வழக்கத்திற்கு மாறாக அல்லது அதற்குட்பட்ட வகையில் காணப்படின் அல்லது விசேடமாக குறுக்கு கோடிடப்பட்டு வங்கியாளருக்கு அனுப்பப்படுதலாகும். தேவைப்படின் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு கூற்றினையும் இடலாம். அதாவது வங்கியின் பெயரிற்கு மேலதிகமாக "கைமாற்றத்தகாதது", வங்கிக் கணக்கினூடாக மட்டும்" போன்ற கூற்றுக்களை இடுதலாகும். எப்போது விசேட குறுக்கீடு செய்யப்படுகின்றபோது குறித்த குறுக்கு கோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் குறித்த காசோலை வரவாக்கப்படலாம். உதாரணமாக பின்வரும் வகையில் விசேட குறுக்கு கோடு இடப்படலாம்.




*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| |
|---|
| ***அத்தியாயம் 08 - காப்பீட்டு சட்டம், வாடகை கொள்முதல் மற்றும் குத்தகை (Law Of Insurance, Hire Purchase and leasing)*** |

**(அ)** காப்பீட்டு ஒப்பந்தமானது மிகுந்த நல்லெண்ணத்தினை (Uberrimae fidei) அடிப்படையாகக் கொண்டது. அதன்படி, ஒரு நபர் காப்பீட்டு ஆரம்ப தொகையின் அடிப்படையில் காப்பீட்டு ஒப்பந்தத்திற்குள் எத்தணிக்க அல்லது காப்பீட்டு ஒப்பந்தத்திற்குள் நுழைய முடிவு எடுக்கும்போது காப்பீட்டாளர்கள் அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்தவேண்டிய கடமை காணப்படுகின்றது. இந்த கோட்பாடானது, காப்பீட்டு பரிவர்த்தனைகள் ஈடுபடுபவர்கள அனைவரும் உண்மையானவர்கள் என்ற பொதுவான உத்தரவாதத்தை ஏற்படுத்துகின்றது. உண்மையான தகவல்களை வெளிப்படுத்த தவறும் போது காப்பீட்டு ஒப்பந்தம் வலிதற்றதாகின்றது. ஒப்பந்த கருத்தேற்பு பற்றிய தவறான சித்தரிப்புகள் ஒப்பந்தத்தின் நன்னோக்கத்தை முறிவடைய செய்யும். தவறான சித்தரிப்புகள் அல்லது பிறழ்பகர்வானது வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ எழுகின்றபோதும் அவை காப்பீட்டாளரின் நன்மைகளை பாதிக்கும்.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் **அபேக்ஷா** என்பவர் காப்பீட்டு கொள்கைக்குள் உள்வாங்கப்படுகின்ற நேரத்தில் காப்பீட்டு நிறுவனத்திற்கு தனது மருத்துவ நிலைமைகள் தொடர்பில் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை. உண்மையான தகவல்களை வெளிப்படுத்த **அபேக்ஷா** தவறியமையானது நல்லெண்ண கோட்பாட்டினை (Uberrimae fidei) மீறிமையமையாகும். ஆகவே, தவறான கூற்றின் அடிப்படையில் காப்பீட்டாளரினால் பொறுப்புக்கள் நிராகரிக்கப்படலாம். அத்துடன் காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் அவை நியாயப்படுத்தப்படலாம். ஆகவே, **அபேக்ஷாவில் தங்கியுள்ளோர்** ஆயள் காப்புறுதி திட்டத்தின் கீழ் இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான சட்ட உரிமை இல்லை.

**வழக்குச்சட்டம்: லூக்கர் எதிர் யூனியன் இன்சுவரன்ஸ் கம்பனி (*Looker* V *Law Union Insurance Company)***

*(07 புள்ளிகள்)*

**(ஆ)**

1. சட்ட பொறுப்புக்களை உருவாக்கும் எண்ணம்
2. காப்பீட்டு சலுகை மற்றும் கொடை முனைவு
3. ஏற்புடைமை (ஏற்றுக்கொள்ளுதல்)
4. சட்ட வலிதுடைமை
5. திறமையான கட்சிக்காரர்கள்
6. பெறுமதி

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

| |
|---|
| *பகுதி **B** முடிவு* |

(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி -C**

***வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

*அத்தியாயம் 02 - ஒப்பந்தச் சட்டம்* ***(Contract Law)***

**(அ)**

**1 கொடை முனைவினை இரத்து செய்தல்**

கொடை முனைவினை வழங்குபவர் அதனை ஏற்கும் முன் எந்நேரத்திலும் இரத்து செய்ய முடியும். இருந்தபோதிலும் குறித்த காலப்பகுதி வரை கொடை முனைவினை வைத்திருப்பதாக உறுதியளித்திருப்பினும் அதனை ஏற்கும் முன் எந்நேரத்தில் இரத்து செய்தல் கொடை முனைவினை வழங்குபவரின் சுதந்திரமாகும்.

வழக்கு சட்டம்: ரவுட்லெட்ஜ் எதிர் கிரான்ட் (*Routledge* V. *Grant )*

**2 கொடை முனைவினை நிராகரித்தல்**

நிராகரிப்பானது 02 வகையில் மேற்கொள்ளப்படலாம்.

- வெளிப்படையான நிராகரிப்பு
- பெற்றுக்கொள்பவரின் எதிர் சலுகை (கொடை முனைவு)

எதிர் சலுகையானது (கொடை முனைவு) இரண்டு வழிகளில் இடம்பெறலாம். புதிய கொடை முனைவு (சலுகை) இனை உருவாக்குதல் (ஆரம்ப கொடை முனைவாக கருதப்படலாம்.) அல்லது நிபந்தனைகளின் அடிப்படையில் கொடை முனைவினை ஏற்றுக்கொள்ளதல். எதிர் சலகை அல்லது முன்மொழிவொன்று உருவாக்கப்படும்போது ஆரம்ப கொடை முனைவு நிராகரிக்கப்படுவதுடன் ஆரம்ப கொடை முனைவாளரும் (வழங்குனர்) இல்லாது செய்யப்படுவார்.

வழக்கு சட்டம்: *Neale Vs Merett and Hyde Vs Wrench*

**3 காலதாமதம்**

கொடை முனைவானது குறித்த காலப்பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் அல்லது கொடை முனைவு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நியாயமான காலப்பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் கொடை முனைவு முடிவுக்கு வரும் (காலாவதியாகும்). இது இரண்டு வழிகளில் இடம்பெறலாம். வழங்கப்பட்ட குறித்த காலப்பகுதி மற்றும் குறித்த காலப்பகுதியொன்று வழங்கப்படாத சந்தர்ப்பம் என்பனவாகும்.

வழக்கு சட்டம்: *Ramsgate Victoria Hotel V. Montifiore*

**4 விரக்தி நிலையினை அடைதல் (Frustration)**

வழங்குனர் மற்றும் பெறுநரின் கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்ட செயலின் காரணமாக கொடை முனைவினை சரியாக செயற்படுத்த முடியாதபோது கொடை முனைவானது விரக்தி நிலை காரணமாக முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படும். உதாரணமாக, ஒப்பந்தத்தின் விடயப்பொருளின் அழிவு காரணமாக கொடை முனைவினை சரியாக செயற்படுத்த

முடியாதபோது கொடை முனைவானது விரக்தி நிலை காரணமாக முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படும், வழங்குனர் மற்றும் பெறுநரின் இறப்பு அல்லது மனநோய்

***(04 புள்ளிகள்)***

**(ஆ) இராணி** மற்றும் **ஏபீசீ லிமிடெட்** இடையில் தோன்றியுள்ள பிரச்சினையானது ஒப்பந்தச் சட்டத்தின் கீழான ஏற்புடைமைக்கு பொருத்தமான கோட்பாடுகளுடன் தொடர்புடையதாகும். ஏற்றுக்கொள்ளுதலானது முறையாக இருக்கவேண்டும். பெறுநரினால் வழங்குனருக்கு வழங்கப்படும் ஏற்றுக்கொள்ளல் நிபந்தனையற்ற ஒப்புதலாகும். வலிதான ஏற்றுக்கொள்ளல் இல்லாதபோது வலிதானதொரு ஒப்பந்தம் உருவாகாது. ஏற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய உத்தியேகப்பூர்வமற்ற மற்றும் அதிகாரமற்ற தகவல் பரிமாற்றமானது வலிதானதொரு ஏற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய தகவல் பரிமாற்றமாகக் கருதப்படாது. வழங்குனருடன் அதிகாரபூர்வமாக செய்யப்படும் ஏற்றுக்கொள்ளல் மட்டுமே நடைமுறைக்கு வரும்.

வழக்கு சட்டம்: Powel V. Lee

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் **இராணி** மற்றும் **ஏபீசீ லிமிடெட்** இடையில் தோன்றியுள்ள பிரச்சினையில் கம்பனியின் தீர்மானமானது அதிகாரபூர்வமான தகவல் பரிமாற்றத்துடன் செய்யப்படவில்லை. இருப்பினும், **இராணியை ஏபீசீ லிமிடெட் உதவி கணக்காளராக** நியமிக்கவிருப்பது பற்றி வரையறுக்கப்பட்ட **ஏபீசீ லிமிடெட்** இன் பணிப்பாள் ஒருவரினால் **ராணிக்கு** உத்தியோகப்பூர்வமற்ற வகையிலே தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே **இராணி** மற்றும் **ஏபீசீ லிமிடெட்** இடையில் வலிதானதொரு ஏற்புடைமை காணப்படாததோடு வலிதானதொரு உடன்படிக்கையும் தோன்றவில்லை. எனவே **இராணி** இற்கு **ஏபீசீ லிமிடெட்** எதிராக நியாயமான சட்ட நிவாரணம் ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியாது.

***(06 புள்ளிகள்)***

SRI LANKA

**(இ)** இது ஒப்பந்த சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது. சட்ட உறவொன்றினை ஏற்படுத்திக்கொள்ளும் எண்ணத்துடன் திறத்தவர்களுக்கு இடையே மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை ஒப்பந்தமாகக் கருதப்படும். வலிதானதொரு ஒப்பந்தம் உருவாக இரு கூறுகள் மிக அவசியமாகும். கொடை முனைவு மற்றும் கொடை ஏற்பு என்பனவாகும். வழங்குனரினால் பெறுநருக்கு செய்யப்படும் விதிமுறைகளுக்கு கட்டுப்படும் வகையில் செய்யப்படும் உறுதிமொழி அல்லது கலந்தாலோசிப்பதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்தல் கொடை முனைவு ஆகும். கொடை முனைவு வாய்மொழி ஊடாக, எழுத்து மூலாமாக, உட்கிடையாக செய்யப்படலாம். வலிதானதொரு ஒப்பந்தமொன்று உருவாகும் முன்னர் கொடைமுனைவு கொடை ஏற்பாக மாற்றப்படவேண்டும்.

இவ்வழக்கில் **ராணி**யின் கணவரான **ராஜா** அவர்களுடைய வீட்டை ரூபா 15 மில்லியனுக்கு **அமல்** என்பவருக்கு விற்க விருப்பந் தெரிவித்திருந்தார்.

கொடை முனைவானது நிராகரிப்பின் ஊடாக முடிவுக்கு கொண்டுவரப்படலாம். பெறுநர் கொடைமுனைவை நிராகரிக்கும் போது அது முடிவுக்கு வரும். அத்துடன் எதிர் முனைவின்

ஊடாக ஆரம்ப கொடை முனைவு நிராகரிக்கப்படலாம். எதிர் சலுகையானது (கொடை முனைவு) இரண்டு வழிகளில் இடம்பெறலாம். புதிய கொடை முனைவு (சலுகை) இனை உருவாக்குதல் (ஆரம்ப கொடை முனைவாக கருதப்படலாம்.) அல்லது நிபந்தனைகளின் அடிப்படையில் கொடை முனைவினை ஏற்றுக்கொள்ளுதல்.

இவ்வழக்கில் **அமல்** வீட்டை ரூபா 14 மில்லியனுக்கு வாங்குவதறகு அவரின் விருப்பை தெரிவித்து எதிர் முனைவினை தெரியப்படுத்துகின்றார். வீட்டை ரூபா 15 மில்லியனுக்கு **அமல்** என்பவருக்கு விற்க விருப்பந்தெரிவித்த ஆரம்ப கொடை முனைவு எதிர் முனைவால் முடிவுக்கு வருகின்றது. ஆகவே, **ராஜா** மற்றும் **அமல்** இடையில் வலிதானதொரு ரூபா 14 மில்லியன் அல்லது ரூபா 15 மில்லியனுக்கு ஒப்பந்தம் தோன்றவில்லை

அத்துடன், **அமல்** ரூபா 15 மில்லியனுக்கு வீட்டினை வாங்க அவரது விருப்பினை தெரிவிக்கின்றார். இருந்தபோதிலும் முன்னைய கொடை முனைவானது முடிவுக்கு வந்துவிட்டதுடன் இது புதிய முனைவாகக் கருதப்படும். **அமல்** வழங்குனராகவும் **ராஜா** பெறுநராகவும் கருதப்படுவார். முனைவினை ஏற்பவரான **ராஜா** அதனை ஏற்கவும் மறக்கவும் சுதந்திரமாக முடிவெடுக்கலாம். ஆகவே, **அமல்** மற்றும் **ராஜா** இடையே வலிதானதொரு கொடை முனைவு, கொடை ஏற்பு அல்லது ஒப்பந்தம் உருவாகவில்லை.

வழக்குச் சட்டம் *:* *Neale Vs Merett*

Hyde Vs Wrench

***(05 புள்ளிகள்)***

***அத்தியாயம் 10 - முகவராண்மை சட்டம் (Law of Agency)***

***(அ)***

**(அ)**

முகவர் சட்டமானது ஒரு முகவரின் கடமைகளை அடிப்படையாகக் கொண்டது.

முகவராண்மை என்பது இரண்டு திறத்தவர்களுக்கு இடையிலான நம்பிக்கையான உறவுமுறை என அடையாளப்படுத்தப்படுகின்றது. அதாவது ஒரு நபர் அல்லது அவர் சார்பாக இயங்குவதற்காக இன்னொரு நபரை நியமிக்கும் பட்சத்தில் மற்றைய நபர் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஏற்று செயற்படுவதற்கு சம்மதித்தல் அல்லது இணக்கம் தெரிவித்தல் ஆகும். அதிகாரத்தினை வழங்குபவர் “அதிபர்” என அழைக்கப்படுவார். அதேவேளை அவ்வதிகாரத்தினை ஏற்றுக்கொள்பவர் “முகவர்” என பெயரிடப்படுவார்.

மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தில், காதியின் வியாபாரத்தில் முகாமையாளராக **“வீனா”** வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். அதற்கமைவாக காதியின் சார்பாக **“வீனா”** வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். எனவே, **“வீனா”** முகவராக அடையாளப்படுத்தப்படுகின்றார். அவர்களுக்கு இடையே முகவராண்மைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

முகவர் என்பது உறவுமுறையில் நம்பிக்கையானது. முகவர் அதிபரால் வழங்கப்படும் நம்பிக்கை பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். எந்தவொரு முகவரும் அதிபரடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு நம்பிக்கையான தகவலையும் வேறு எந்தவொரு நபருக்கும்

aat SRI LANKA

வெளிப்படுத்த முடியாது. மற்றும் முகவரின் தனிப்பட்ட விடயங்களுக்காக பயன்படுத்தவும் முடியாத. நம்பிக்கையுடனான “கடமை” என்பது உறவுமுறைக்கும் மேலாக கருதப்படுகின்றது.

வழக்குச் சட்டம் *:* *AG V Blake*

இங்கு வீனா காதியின் வணிகத் தகவல்களை அவருடைய போட்டிவணிக நோக்கத்திற்கு பயன்படுத்தியுள்ளார். அவள் தனது கொள்கையின்படி நம்பிக்கை ரீதியான கடமையினை மீறியுள்ளார். மேலும் போட்டி வணிகத்தை நடாத்துவதன் மூலம் அவளது தனிப்பட்ட நலனுக்கும் வணிக நலனுக்குமிடையே மோதலை உருவாக்குகின்றது.

இதற்கமைவாக “அதிபர்” என்றவகையில் வீனாவினால் முகவர் உறவினை முடிவு செய்வதற்கான முழு உரிமை காதிக்கு உண்டு. அதேவேளை வீனாவினால் காதியின் வியாபாரதத்தின் மூலமான உறவினையும் தகவல்களையும் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தப்படாத இலாபத்தினை மீளப்பெறுவதற்காக வீனாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் உரிமை உண்டு.

***(05 புள்ளிகள்)***

**(ஆ)** “டொனி” காதியின் சொத்துடைமையை விற்பனை செய்யும் நோக்கில் அதனை வாங்குபவர்களை கண்டறிவதற்காக முகவராக நியமிக்கப்படுகின்றார்.

ஒவ்வொரு முகவரும் தன்னுடைய அதிபர் சார்பாக மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு முகவரின் கவனக்குறைவால் அதிபருக்கு நட்டம் ஏற்படின் அந்த நட்டத்தினை ஈடுசெய்ய வேண்டியது முகவரின் கடமையாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட வழக்கில், காதியின் சொத்தினை அதிக விலைக்கு வாங்குவதற்கு தயாராக இருந்தவர் தொடர்பான தகவலை டொனி, டொனியின் கவனக்குறைவால் காதிக்கு தெரிவிக்காமல் விட்டுவிடுகிறார். எனவே, இந்நிகழ்வு முகவருக்கான கவனத்துடனான கடமையினை மீறிய செயலாக கருதப்படுகின்றது. டொனியின் கவனக்குறைவினால் ஏற்படுத்தப்பட்ட நஷ்டத்திற்கான சன்மானத்தினை சாதிக்கு வழங்குவதற்கும்டொனி வகைக்கூற கடமைப்பட்டவராவார்.

வழக்குச் சட்டம்: கெப்பல் எதிர் வீலர் *(Keppel V Wheeler)*

மேலும் காதியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு ஏற்ப டொனி செயற்படவில்லை என்பதால், இவர்கள் இருவருக்கிடையிலான “முகவருக்கான நம்பிக்கை பொறுப்பானது” மீறப்பட்டுள்ளது.

வழக்குச் சட்டம்: டர்பின் எதிர் பில்டன் (Turpin V Bilton)

ஆகவே, மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக காதிக்கு ஏற்பட்ட நட்டத்திற்கான நட்டஈட்டினை வழங்குவதற்கும் டொனி பொறுப்பாளியாவார். டொனியிடம் இருந்து இழப்பீட்டினை பெறுவதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பது காதியின் தெரிவாகும்.

***(05 புள்ளிகள்)***
***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***பகுதி C முடிவு***

SRI LANKA

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*